DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 198/2022

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.ஆசைத்தம்பி | Caste: | |
| Father's Name | : முத்துமணி | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

23.02.2026 – 11.30 AM

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

அரசு தரப்பில் முதல் விசாரணை:–

1. நான் கமுதியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை சம்பவத்தின் போது எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் சீட்டு பணம் பிடித்து வந்தார்கள். நான் அவர்களிடம் ரூ.16,000/–சீட்டு பணம் எடுத்திருந்தேன். அதற்கு மாதந்தோறும் உள்ள தொகையை செலுத்திக் கொண்டு வந்தேன். அவ்வாறு மாதத்திற்கு ரூ.2,000/–வரையில் செலுத்தி வந்தேன். கடைசி மாதம் சீட்டு பணத்தொகையை 15ம் தேதிக்குள் என்னால் கட்ட முடியவில்லை. அதனால் எதிரிகள் இருவரும் சுமார் 10 நபர்களை அழைத்துக் கொண்டு இரவு 08.00 மணியளவில் எனது வீட்டிற்கு வந்தார். அப்போது நான் மட்டும் தனியாக வீட்டில் இருந்தேன். எனது மனைவி கோவிலுக்குச் சென்றிருந்தார்.

2. எதிரிகள் கையில் கத்தி மற்றும் கம்பு போன்ற ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள் என் வீட்டிற்கு வந்து கதவை தட்டி நான் திறந்த போது 1ம் எதிரி அவர் இடது கையில் வைத்திருந்த கம்பால் எனது தலையில் அடித்தார். பின்னர் வலது கையில் வைத்திருந்த கத்தியால் என்னை வெட்ட முயன்றபோது நான் கதவை தாழிட்டுக் கொண்டேன். நான் வாசலில் நிறுத்தியிருந்த TN 65 Y 6274 என்ற பதிவு எண் கொண்ட Discover இரு சக்கர வாகனத்தை எதிரிகள் அனைவரும் சேர்ந்து உடைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அதன் மதிப்பு ரூ.50,000/–ஆகும். எதிரிகள் என்னை அடித்தபோது அக்கம் பக்கத்தில் இருந்த சில பெண்கள் வந்து தடுத்தார்கள்.

அவர்களது பெயர்கள் எனக்கு நினைவில் இல்லை. அதன் பின்னர் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டதாக அருகிலிருந்த பெண்கள் எனது வீட்டிற்கு வந்து வீட்டுக் கதவை தட்டிக் கூறினார்கள்.

3. நான் வெளியே வந்து எனது செல்போனிலிருந்து கமுதி காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் அளித்தேன். போலீசார் வந்து விசாரித்துவிட்டு சென்றார்கள். மறுநாள் காலையில் எனது மகன் முத்துமுருகபாண்டியனுக்கு போன் செய்து அவர் வந்தவுடன் கமுதி காவல் நிலையம் சென்று எழுத்துப்பூர்வமான புகார் அளித்துவிட்டு அதன் பின்னர் கமுதி அரசு மருத்துவமனை சென்று முதலுதவி சிகிச்சை பெற்றுக் கொண்டு மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் அளித்தது தான். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் மனு அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான் புகாரிலும் போலீசார் விசாரித்தபோதும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவமானது எந்த தேதியில் நடைபெற்றதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் 23.07.2021ம் தேதி நடந்ததாக கூறியுள்ளேன். ஆனால் முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவமானது 15ம் தேதி இரவு நடைபெற்றதாக கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. நான் 15ம் தேதி என்று தான் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றாலும் தற்போது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 23.07.2021ம் தேதி சம்பவம் நடந்ததாக சொல்வதால் என்னுடைய சாட்சியம் முன்னுக்குப் பின் முரணாக உள்ளதால் நம்பத்தகுந்ததல்ல என்றால் சரியல்ல.

2. நான் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கூறியபடி 23.07.2021ம் தேதி சம்பவம் நடந்திருந்தால் கூட எப்போது புகார் அளித்திருந்தேன் என்றால் 24.07.2021ம் தேதி புகார் அளித்தேன். புகாரில் நான் எந்த தேதியில் புகார்

அளித்தேன் என்ற விபரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு 09.08.2021ம் தேதி தகவல் கிடைக்கப்பெற்றதாக இருந்தால் அது பொய் என்றால் சரிதான். நான் கொடுத்ததாக சொல்லப்படுகிற புகாரில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காகவும் உயிருக்கு பயந்து வெளியூர் சென்றுவிட்டதால் தாமதம் ஏற்பட்டதாக இருந்தால் அது பொய் என்றால் சரிதான்.

3. புகாரை எனது மகன் எங்கள் வீட்டில் வைத்து எழுதினார். சம்பவம் நடக்கும் போதே எங்கள் வீட்டருகே 30 பெண்கள் வரை கூடிவிட்டார்கள். அந்த பெண்கள் எனது வீட்டருகே வசிப்பதால் அவர்களது பெயர் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் அவர்களை தெரிந்து கொண்டே புகாரில் யார் என்பதை குறிப்பிடவில்லை என்றால் அந்த பெண்கள் என்னிடம் அவர்களது பெயரை கூறவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். நான் அளித்த புகாரில் எதிரிகளுக்கு ரூ.2,000/- கொடுக்க வேண்டியது இருப்பதாக குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறு புகாரில் இல்லை என்றால் சரியல்ல.

4. நான் வீட்டிற்குள் சென்று கதவை பூட்டிக் கொண்டதாக சொல்லப்படுகிற நிலையில் எனது வாகனத்திற்கு எவ்வாறு சேதாரம் ஏற்பட்டதை என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அக்கம் பக்கத்தில் இருந்த பெண்கள் கூறி தெரிந்து கொண்டேன். நான் என்றைய தேதியில் சீட்டு பணம் செலுத்த வேண்டும் என்றால் 16ம் தேதி செலுத்த வேண்டும். நான் எந்த தேதியில் செலுத்துவதாக கூறியிருந்தேன் என்றால் 2 தினங்கள் கழித்து செலுத்துவதாக கூறியிருந்தேன். அது எந்த தேதி என்று கூற முடியுமா என்றால் 19ம் தேதியன்று என்று நினைக்கிறேன். எதிரிகளும் 19ம் தேதியன்று எனது வீட்டிற்கு வந்து கேட்டுவிட்டுச் சென்றார்கள். அந்த சமயத்தில் பிரச்சனை செய்யவில்லை என்றால் சரிதான்.

5. நான் அளித்த புகாரில் வண்டியின் சேதார மதிப்பு ரூ.50,000/-என்று கூறியிருந்தேன். வண்டியை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. போலீசார் சம்பவ இடத்திற்கு சம்பவத்தன்று இரவு வந்து வண்டியை புகைப்படம்

எடுத்துச் சென்றார்கள். நான் அளித்த புகாரில் எதிரிகள் கத்தி, அருவாள் போன்ற ஆயுதங்களால் தாக்க முயன்றார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தாக்கியதாக கூறியுள்ளேன். அவ்வாறு கூறவில்லை என்றாலும் நான் மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் சம்பவத்தன்று சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்த பின்னர் மீண்டும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான்.

6. நான் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நான் எதிரிகளிடம் சீட்டு பணம் எடுத்துக்கொண்டு அதைக் கட்டாமல் எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் கூறியபடி சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றிருப்பேன் என்றாலும் புகாரையும் உடனடியாக அளித்திருப்பேன் என்றாலும் சரியல்ல. வாகனத்தின் சேதார மதிப்பு குறித்து போலீசாரிடம் நான் ரூ.1,000/- என்று சொல்லியிருந்தால் அது பொய். நான் அவ்வாறு கூறவில்லை. போலீசார் என்னை சம்பவத்தன்று விசாரித்த பின்னர் மீண்டும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறியபடி வாகனம் சேதப்பட்டிருந்தால் அந்த வாகனத்தை போலீசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.02.23 17:05:39 +0530